PRIMARY SCHOOL

SEMESTRAL ASSESSMENT - 1 2014

TAMIL LANGUAGE - PAPER 2

PRIMARY 6

| தாள் 2: **BOOKLET A & B** |
|---|

பெயர் : ______ ______ ( )  மதிப்பெண் : ________ /

வகுப்பு : P6/ __________  நேரம் : 1 hr 40mins

கட்டளைகள்

1. ஆசிரியர் சொல்லும்வரை தாளைத் திருப்பாதே.
2. கட்டளைகளைக் கவனமாகப் படித்துப் பின்பற்று.
3. எல்லா கேள்விகளுக்கும் விடையளிக்கவும்.

## தாள் 1 - கட்டுரை

இவ்வினாத்தாளில் இரண்டு வினாக்கள் இடம்பெறும். அவற்றுள் ஒன்றுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும். இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும், வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும், கட்டுரை எழுதுவதற்கும் 50 நிமிடங்கள் கொடுக்கப்படும். வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் செலவிட வேண்டாம்.

வினா 1


ஒரு மறக்க முடியாத சம்பவம்

உன்னால் மறக்க முடியாத ஒரு சம்பவத்தைப் பற்றி **100 சொற்களுக்குக் குறையாமல்** ஒரு கட்டுரை எழுது. கீழ்க்காணும் கேள்விகளை இந்தக் கட்டுரை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக்கொள்ளலாம்:

- அது என்ன சம்பவம்?
- அந்தச் சம்பவம் எப்போது நடந்தது?
- அந்தச் சம்பவம் நடக்கக் காரணம் என்ன?
- அந்தச் சம்பவத்தால் நீ எவ்வாறு பாதிக்கப்பட்டாய்?
- உன் மனநிலை எப்படி இருந்தது?

வினா 2

கீழ்க்காணும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு **100 சொற்களுக்குக் குறையாமல்** ஒரு கட்டுரை/கதை எழுது. படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களையும் சொற்றொடர்களையும் நீ இந்தக் கட்டுரை /கதை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக்கொள்ளலாம்.




| | |
|---|---|
| கட்டடத்தின் கீழ்த்தளம் | வீடு திரும்பி |
| விளையாட்டுச் சீட்டுகள் | கோபத்துடன் |
| வாக்குவாதம் | கையை ஓங்கினார் |
| வழிப்போக்கர் | விரைந்து வந்தனர் |

Q1 முதல் Q6 வரையுள்ள வினாக்களுக்கு விடைத்தாளில் சரியான விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.

## அ பிரிவு

**வேற்றுமை உருபு**

1 முதல் 6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான **வேற்றுமை உருபு** ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

மறுநாள் பொங்கல். ___(Q1)___ அம்மா வாசலில் ஏதோ வேலை செய்துகொண்டிருந்தார். அவர் என்ன செய்கிறார் என்பதைப் பார்க்க ராணி ___ (Q2)__ மிகுதியால் வாசலுக்குச் சென்றாள். அங்கே அம்மா அழகிய கோலம் ஒன்றைப் போட்டுக் கொண்டிருந்தார். அவர் எவ்வாறு இவ்வளவு அழகாக கோலம் போடக் கற்றுக்கொண்டார் என்று ராணி வினவினாள். அதற்கு "அம்மா. "சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கமும் என்பது போல நான் ___(Q3)___ கோலங்கள் போட்டு வருகிறேன் " என்று கூறினார். ராணியின் ___(Q4)___கண்டு கோலத்தைப் பற்றி அவர் மேலும் கூறினார். ஆரம்பத்தில் கோலம் அரிசி ___(Q5)___ மட்டுமே போடப்பட்டது. பறவைகள் எறும்புகள் போன்றவற்றுக்கு ___(Q6)___ பயன்பட வேண்டும் என்பதே இதன் முக்கிய நோக்கமாகும் என்று அவர் விளக்கினார். அதைக் கேட்ட ராணிக்குக் கோலம் போடுவதைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள ஆர்வம் உண்டாயிற்று.

Q1
(1) ராணியுடன்
(2) ராணியினால்
(3) ராணியின்
(4) ராணிக்கு

Q2 (1) ஆவலுடன்
(2) ஆவலால்
(3) ஆவலை
(4) ஆவல்

Q3 (1) சிறுவயதிலிருந்து
(2) சிறுவயதில்
(3) சிறுவயதுக்கு
(4) சிறுவயதினால்

Q4 (1) நாட்டத்தால்
(2) நாட்டத்துடன்
(3) நாட்டத்துக்கு
(4) நாட்டத்தை

Q5 (1) மாவை
(2) மாவுடன்
(3) மாவினால்
(4) மாவுக்கு

Q6 (1) உணவாக
(2) உணவை
(3) உணவுக்கு
(4) உணவோடு

## செய்யுள் / பழமொழி

7 முதல் 12 வரையுள்ள **செய்யுள் / பழமொழியை** நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.
(12 மதிப்பெண்கள்)

7. ______________ பலவான் ஆவான்.

(1) அறிவாளி
(2) புத்திசாலி
(3) அறிவுடையவன்
(4) புத்திமான்

8. விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
_________________ தலைகாண்பு அரிது.

(1) மிகைநாடி
(2) பல்லுயிர்
(3) எண்ணுவம்
(4) பசும்புல்

9. கரைப்பார் கரைத்தால் _________________ கரையும்.

(1) மண்ணும்
(2) கல்லும்
(3) பாறையும்
(4) செங்கல்லும்

10. இயற்றலும் ஈட்டலும் _______________ காத்த
வகுத்தலும் வல்ல தரசு.

(1) எடுத்தலும்
(2) படைத்தலும்
(3) வகுத்தலும்
(4) காத்தலும்

11. __________________ காரியம் சிதறாது .

(1) நாடாத
(2) முடிக்காத
(3) பதறாத
(4) துணியாத

12. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
__________________ காண்ப தறிவு.

(1) மென்பொருள்
(2) தனிப்பொருள்
(3) கடைப்பொருள்
(4) மெய்ப்பொருள்

## தெரிவுவிடைக் கருத்தறிதல்

பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி:

பசுமலை என்ற ஓர் அழகான சிறிய கிராமத்தில் மக்கள் நேர்மையாகவும், கடுமையாகவும் உழைத்து மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர். அவ்வூரில் பசுபதி என்ற பெரியவர் வாழ்ந்து வந்தார். அவர் நேர்மையே வடிவானவர். அவர் ஊரிலுள்ள வழக்குகளை நன்றாக **ஆராய்ந்து** சரியாக நீதி வழங்குவார். அதனால், அவ்வூர் மக்கள் அவரை ஊர்த்தலைவராக நியமனம் செய்தனர்.

நேர்மையான குணமுடைய பசுபதிக்கு மாணிக்கம் என்ற ஒரு மகன் இருந்தான். அவன் தீய நண்பர்களுடன் சேர்ந்துகொண்டு பசுபதியின் சொத்துகளை அழித்து வந்தான். பசுபதி தன் மகனைத் திருத்த முயற்சிகள் பல மேற்கொண்டும், அவரது மகன் திருந்திய பாடில்லை. ஒருநாள், ஞானி ஒருவர் பசுபதியின் நேர்மையைக் கேள்விப்பட்டு அவருக்கு ஓர் அதிசய முத்துமாலையைப் பரிசாகக் கொடுத்தார். அந்த முத்துமாலையை அணிந்துகொண்டால் முதல்நாள் நடந்த செயல்களை முத்துமாலை படம் பிடித்துக் காட்டிவிடும். இந்த முத்துமாலையை அணிந்துகொண்டு மகனது தீய செயல்களைத் தெரிந்துகொள்ள பசுபதி விரும்பினார்.

ஒரு முறை பசுபதியைத் தேடிக்கொண்டு ஒருவர் வந்தார். “ஐயா ! நேற்று என் வீட்டிலிருந்த நகைகள் திருட்டுப்போய் விட்டன. நீங்கள் தான் திருடனைக் கண்டுபிடித்துத் தர வேண்டும், ” என்று **கெஞ்சினார்**. பசுபதி அவரைச் சமாதானம் செய்து, வீட்டுக்கு அனுப்பி வைத்தார். மறுநாள் காலை அவர் வழக்கம் போல் முத்துமாலையை அணிந்துகொண்டார். அப்போது அவர் மகன், தன்னுடைய நண்பர்களுடன் சேர்ந்து நகைகளைத் திருடிச் சென்ற சம்பவத்தை முத்துமாலை

படம் பிடித்துக் காட்டியது. இதை அறிந்த பசுபதி மனம் **வருந்தினார்.** தான் செய்த தவற்றைத் தந்தை அறிந்துகொண்டார் என்று மாணிக்கம் உணர்ந்தான். இருப்பினும் அவன் மனம் வருந்தவில்லை.

பசுபதி தன் மகனை வழக்குகள் நடக்கும் இடத்திற்கு வரச் சொன்னார். தந்தை தனக்குச் சாதமாகப் பதில் கூறுவார் என்று மகன் எண்ணினான். நகைகளைத் திருடியது மாணிக்கம் என்று நிரூபிக்கப்பட்டதால், அவன் நகையின் சொந்தக்காரரின் வீட்டில் ஏழு ஆண்டுகள் நேர்மையாகவும் இலவசமாகவும் வேலை செய்ய வேண்டும் என்று தீர்ப்பு அளித்தார். இதனைக் கேட்ட மாணிக்கம் அதிர்ந்து நின்றான்.

**Q13 முதல் Q17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS, விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

13. மக்கள் ஏன் பசுபதியை ஊர்த் தலைவராக நியமித்தனர் ?

(1) அவர் வழக்குகளை விசாரித்ததால்

(2) அவர் நியாயமாக நீதி வழங்கியதால்

(3) அவர் கடுமையாக உழைத்ததால்

(4) ஊரில் வேறு தலைவர்கள் கிடைக்காததால்

14. முத்துமாலையின் தன்மை என்ன ?

(1) முத்து மாலையால் திருடனை அடையாளம் காட்ட இயலும்

(2) முத்து மாலையைக் கொண்டு நீதி வழங்கலாம்

(3) முத்து மாலை நடக்கவிருக்கும் செய்லகளைப் படம் பிடித்துக் காட்டும்

(4) முத்து மாலை முதல் நாள் நடந்த சம்பவங்களைப் படம் பிடித்துக் காட்டும்

15. மாணிக்கம் செய்த தவறு என்ன ?

(1) பசுபதியின் மகனாகப் பிறந்தது

(2) தந்தையின் முத்துமைமலையைத் திருடியது

(3) பிறர் நகைகளைத் திருடியது

(4) தீய நண்பர்களோடு நட்பு வைத்துக்கொண்டது

16. பசுபதி வருந்தக் காரணம் என்ன ?

(1) ஊரில் திருட்டை ஒழிக்க இயலாததால்

(2) மகன் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டதால்

(3) மகன் திருடன் என்று அறிந்துகொண்டதால்

(4) நகைகள் திருட்டுப் போனதால்

17. மாணிக்கம் ஏன் அஞ்சவில்லை ?

(1) தான் அந்த நகையைத் திருடவில்லை என நம்பியதால்

(2) தந்தை தவற்றை ஒப்புக்கொள்ளாததால்

(3) தீர்ப்பைப் பசுபதியே வழங்க இருந்ததால்

(4) தந்தை வழக்கை மாற்றிவிடுவார் என கருதியதால்

## சொற்பொருள்

Q18 முதல் Q20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர் OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. ( 6 மதிப்பெண்கள் )

18. ஆராய்ந்து
(1) கண்டுபிடித்து
(2) தேடி
(3) விசாரித்து
(4) தேர்ந்தெடுத்து
[1]


19. கெஞ்சினார்
(1) பதறினார்
(2) மன்றாடினார்
(3) விளக்கினார்
(4) கேட்டார்
[1]


20. வருந்தினார்
(1) அதிர்ச்சியடைந்தார்
(2) வேதனையடைந்தார்
(3) மகிழ்ச்சியடைந்தார்
(4) பதற்றமடைந்தார்
[1]

## கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி:

### சிங்கப்பூர் தமிழ்ச்சங்கம் ஏற்பாடு செய்யும் புத்தகக் கண்காட்சி 2013






- அனுமதி இலவசம்
- தாமரை மண்டபம்
- எல்லா வயதினரும் வரலாம்
- பலவகையான புத்தகங்கள் கிடைக்கும்



**இடம்பெறும் புத்தகங்கள்**

*சிறுவர்களுக்கான பழமொழிக் கதைகள், நீதிக்
*கதைகள்,வேடிக்கைக் கதைகள் மற்றும் மர்மக் கதைகள்
*பெரியவர்களுக்கான இலக்கிய நூல்கள், கவிதை
*நூல்கள், சஞ்சிகைகள், பிரபல நாவல்கள் மற்றும் சமையல் புத்தகங்கள்





<u>இலவசம் ( சிறுவர்களுக்கு)</u>

10 புத்தகங்கள் வாங்கினால் 1 விளையாட்டு கணினி வட்டு கிடைக்கும்

<u>இலவசம் ( பெரியவர்களுக்கு)</u>

ஐம்பது வெள்ளிக்கு மேல் புத்தகங்கள் வாங்குவோருக்கு இலவச பாடல்கள் கொண்ட



புத்தகக் கண்காட்சிக்குத் திரண்டு வந்து உங்கள் ஆதரவைத் தாருங்கள் !
புத்தகக் கண்காட்சி எல்லாருடைய வாசிப்பு ஆர்வத்தைத் தூண்டும் என்பதில் ஐயமில்லை !

Q21 முதல் Q23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

21. இப்புத்தகக் கண்காட்சியின் மூலம் பயனடைபவர்கள் யார் ?

(1) பள்ளி மாணவர்கள்
(2) பெரியவர்கள்
(3) எல்லா வயதினரும்
(4) பெற்றோரும் பிள்ளைகளும்

( 2 ) ✓

22. சிறுவர்களுக்கு என்ன சலுகை வழங்கப்படுகிறது ?

(1) 50 வெள்ளிக்குப் புத்தகங்கள் வாங்கினால் ஒரு கணினி வட்டு இலவசம்
(2) 10 புத்தகங்கள் வாங்கினால் ஒரு கணினி வட்டு இலவசம்
(3) 50 புத்தகங்கள் வாங்கினால் ஒரு கணினி வட்டு இலவசம்
(4) 10 புத்தகங்கள் வாங்கினால் ஒரு பாடல் ஒலித்தட்டு இலவசம்

[ 3 ] ✓

23. பெரியவர்களுக்காக விற்கப்படும் புத்தகங்களில் எது அடங்காது ?

(1) நீதிக்கதைகள்

(2) சஞ்சிகைகள்

(3) கவிதைகள்

(4) நாவல்கள்

( 1 ) ✓

முற்றும்

Q24 முதல் Q41 வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை இந்தப் புத்தகத்தில் எழுது.

‘ஆ’ பிரிவு

**வேறுபாட்டுச் சொற்கள்**

பின்வரும் பகுதியில் Q24 முதல் Q28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. ( 10 மதிப்பெண்கள் )

Q24. பாலன் கருணை உள்ளம் படைத்தவன். அவன் இல்லாதவர்களின் நிலையைக் கண்டு மனம் __________ பல அற நிறுவனங்களுக்கு நன்கொடை வழங்கினான். Q24. (  )

Q25. திருமதி சீத்தா கடந்த பத்து ஆண்டுகளாக ஒரே __________ இருக்கிறார். அதுவே அவருக்கு சலிப்பு ஏற்படக் காரணமாக இருக்கிறது. Q25. (  )

Q26. லீலா மாலை நேரத்தில் பூங்காவில் நடப்பாள். அப்போது அவர் __________ மலர்களின் அழகை ரசிக்கத் தவற மாட்டாள். Q26. (  )

Q27. என் அண்ணனுக்குக் கையில் அடிப்பட்டு ஒரு வாரத்துக்கு மேலாகிவிட்டது. ஆனால் ஏனோ __________ மட்டும் குறையவில்லை. Q27. (  )

Q28. சிறுமி கீழே விழுந்ததால் வலியால் கத்தினாள். அந்தச் சத்தத்தைக் கேட்ட தாய் ஓடி வந்து அவளை __________ ஆறுதல் கூறினார். Q28. (  )

| | |
|---|---|
| (1) இரங்கி | (2) அணைத்து |
| (3) அனைத்து | (4) இறங்கி |
| (5) அல்லி | (6) பணியில் |
| (7) பனியில் | (8) வழி |

**முன்னுணர்வுக் கருத்தறிதல்**

பின்வரும் பகுதியில் Q29 முதல் Q35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புதவற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து, அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. ( 14 மதிப்பெண்கள் )

நம் நாடு தூய்மையான நாடாகத் திகழ்கிறது. அதனால் நம் நாட்டிற்கு வரும் சுற்றுப்பயணிகளை மிகவும் ___(29)____ வருகிறது என்பது நாம் அனைவரும் அறிந்த ஓர் உண்மை. அது மட்டுமல்ல நம் நாட்டில் சட்ட ஒழுங்கு எவ்வாறு ___(30)___ வரப்படுகின்றன என்பதையும் நாம் அறிவோம். இத்தகைய ___(31)___ பெற்ற நாட்டில் வாழ்வதை எண்ணி நாம் பெருமை அடைய வேண்டும். நம் நாட்டின் பெருமையை ___(32)___ சிங்கப்பூரர்களாகிய நம் ஒவ்வொருவரின் கடமையாகும். நம்மில் சிலரின் பொறுப்பற்ற செயல்களால் நாட்டின் தூய்மை ___(33)___ வருகிறது.

மின்தூக்கியில் சிறுநீர் கழித்தல், பொது இடங்களில் ___(34)___ வீசுதல், அடுக்குமாடி வீடுகளிலிருந்து பொருள்களைத் தூக்கி வீசுதல் போன்ற செயல்களில் சிலர் ஈடுபடுகின்றனர். நம் அரசாங்கம் சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திருப்பதில் அதிக கவனம் செலுத்தி வருகிறது. பொது இடங்களை அசுத்தப்படுத்துபவர்கள் ___(35)___ செலுத்த வேண்டும் என்ற சட்டமும் நம் நாட்டில் உள்ளது. ஒவ்வொருவருக்கும் நம் நாட்டை நம் வீட்டைப் போல் தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்ற உணர்வும் இருக்க வேண்டும்.

Q29.( )
Q30.( )
Q31.( )
Q32.( )
Q33.( )
Q34.( )
Q35.( )

| | | |
|---|---|---|
| (1) அபராதம் | (2) காப்பது | (3) பாதிக்கப்பட்டு |
| (4) கட்டணம் | (5) கவர்ந்து | (6) பயன்படுத்துதல் |
| (7) புகழ்ந்து | (8) சிறப்பு | (9) கடைப்பிடித்து |
| (10) விளைவாக | (11) காகிதங்களை | (12) மருந்துக்காக |

**சுயவிடைக் கருத்தறிதல்**

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி :

காந்தி சிறுவயதில் ஒருநாள் புகைப்பிடிக்க விரும்பினார். அவர் தன் உறவினன் ஒருவனுடன் புகை பிடிக்கச் சென்றார். அதற்காக அவர் தன் வேலைக்காரனின் காசைத் திருடினார். மற்றொரு சமயம் அவர் தான் வாங்கிய கடனை அடைப்பதற்காகத் தன் தமையனிடமிருந்த தங்கத்தைத் திருடினார். தமையன் இதைக் கேட்டபோது அவர் பல காரணங்களைக் கூறி நழுவினார்.

இவ்வாறு அவர் பல தகாத செயல்களைப் புரிந்து வந்தார். இதனால், காந்தி மன அமைதியில்லாமல் துன்புற்றார். இனி இவ்வாறு செய்வதில்லை என தனக்குள் உறுதி எடுத்துக்கொண்டார். தன் குற்றங்களை எப்படியும் தன் தந்தையிடம் ஒப்புக்கொண்டு விடுவது என்று தீர்மானித்தார். ஆனால், அவருக்குச் சொல்ல துணிவு ஏற்படவில்லை. தன் தந்தை தன் இழிசெயலால் மன வேதனை அடைவார் என எண்ணி காந்தி அஞ்சினார். தன் தந்தையிடம் எல்லாவற்றையும் சொன்னால் அன்றி தன் பாவம் தீராது என அவர் கருதினார். ஆனால், சொல்ல துணிவு வரவில்லை. அவர் தன் தந்தைக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் அவர் தன் குற்றங்களுக்கு ஏற்ற தண்டனையை வழங்கும்படி எழுதியிருந்தார். அவர் அக்கடிதத்தைத் தன் தந்தையிடம் கொடுத்தபோது அவர் உடம்பெல்லாம் நடுங்கியது.

அவரின் தந்தை அக்கடிதத்தைப் படித்தார். தந்தையின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கடிதத்தை நனைத்தது. அவர் கண்களை மூடிக்கொண்டு சிந்தித்தார். பிறகு கடிதத்தைக் கிழித்தெறிந்தார். அவர் பட்ட மன வேதனையைக் காந்தியால் உணர முடிந்தது. காந்தி கதறி அழுதார். தன் தந்தையின் கண்ணீர்த் துளிகள் தன்னைத் தூய்மைப்படுத்திவிட்டதாகக் காந்தி நினைத்தார். ஆனால், அவர் தந்தையோ அமைதியாக அமர்ந்திருந்தார். காந்தி எதையும் மறைக்காமல் தன் குற்றத்தை ஒத்துக்கொண்டது அவருக்கு மன நிறைவையும் மகிழ்ச்சியையும் தந்தது.

**Q36 முதல் Q41 வரைப்பள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. ( 20 மதிப்பெண்கள் )**

Q36. காந்தி புரிந்த குற்றங்கள் யாவை ? ( 4 மதிப்பெண்கள் )

Q37. காந்தி நிம்மதி இல்லாமல் இருந்ததற்குக் காரணம் என்ன ? ( 3 மதிப்பெண்கள் )

Q38. காந்தி தன் செயல்களைப் பற்றி ஏன் தன் தந்தையிடம் சொல்ல நினைத்தார் ? ( 3 மதிப்பெண்கள் )

Q39. காந்தி தன் தந்தைக்கு எழுதிய கடிதத்தில் என்ன எழுதியிருந்தார் ?

( 3 மதிப்பெண்கள் )

Q40. கடிதத்தைப் படித்த தந்தை என்ன செய்தார் ? ( 4 மதிப்பெண்கள் )

Q41. தந்தையின் மன மகிழ்ச்சிக்கு எது காரணமாக அமைந்தது ?

( 3 மதிப்பெண்கள் )

முற்றும்

**P6 SA1**

Primary - **TESTPAPER 2**

மறு நாள் பொங்கல்.......

1. 3 2. 4 3. 1 4. 4 5. 3 6. 1

7. 4 8. 4 9. 2 10. 4 11. 3 12. 4

13. 2 14. 4 15. 4 16. 3 17. 4

18. 3 19. 2 20. 2

21. 3 22. 2 23. 1

24. 1 25. 6 26. 5 27. 9 28. 2

முன்னுணர்வுக் கருத்தறிதல்

29. 5

30. 9

31. 8

32. 2

33. 3

34. 11

35. 1

சுயவிடாக் கருத்தறிதல்

36. காந்தி புகை பிடிப்பதற்காக தன் வேலைக்காரனின் காசைத் திருடினார்.அவர் தான் வாங்கிய கடனை அடைப்பதற்காகத் தன் தமையனிடமிருந்த தங்கத்தைத் திருடினார். இவையே காந்தி செய்த குற்றங்களாகும்.

37. காந்தி பல தகாத செயல்களைப் புரிந்து வந்ததே அவர் நிம்மதி இல்லாமல் இருந்ததற்குக் காரணமாகும்.

38. அவர் இனிமேல் குற்றங்கள் செய்வதில்லை என்று தனக்குள் உறுதி எடுத்துக்கொண்டதால் தன் குற்றங்களை எப்படியும் தன் தந்தையிடம் சொல்ல நினைத்தார்.

39. காந்தி தன் தந்தைக்கு எழுதிய கடிதத்தில் தன் குற்றங்களுக்கு ஏற்ற தண்டனையை வழங்கும்படி எழுதியிருந்தார்.

40. கடிதத்தைப் படித்த தந்தை கண்ணீர் வடித்தார். பிறகு கண்களை மூடிக்கொண்டு சிந்தித்தார். அதன் பின் கடிதத்தைக் கிழித்தெறிந்தார்.

41. காந்தி எதையும் மறைக்காமல் தன் குற்றத்தை ஒத்துக்கொண்டது தந்தையின் மன மகிழ்ச்சிக்குக் காரணமாகும்.